1989 அக்டோபர் 31]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாம்பழம் உற்பத்தி எங்கெங்கே அதிகமாக இருக்கிறது என்ற விவரத்தை அரசு தயார் செய்துள்ள்தா? இப்படிப்பட்ட பகுதிகளில் ஒன்றான தருமபுரி மாவட்டத்தில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மாம்பழம் எங்கெங்கே உற்பத்தியாகிறது என்று ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த செய்தி தான். தருமபுரியில் இப்படிப்பட்டத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. டி. கே. பழனிச்சாமி: தலைவரவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் அடங்கிய மாதவரம் பால் பண்ணையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மாம்பழம் உற்பத்தியாகிறது. அதை அந்தப் பால்பண்ணை அதிகாரிகள் ஏலத்தில் விட்டு, தனியார்கள் கொள்ளையடித்து வருகிறார்கள். அங்கே நிலம் நிறைய காலியாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழம் உற்பத்தியாகிற இடங்களில் எல்லாம் தொழிற்சாலை அமைத்துவிட்டால் பொது மக்களுடைய உபயோகத்திற்கு மாம்பழம் போய்ச் சேராது. ஆகவே, அது பொதுமக்களுடைய உபயோகத்திற்கு இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

ஆதி திராவிடர்களுக்குப் பதவி உயர்வு.

* 3447. **திரு. வீ. பெ. துரைசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மருத்துவத்துறை இயக்குநர், மருத்துவ மற்றும் சுகாதாரத்துறை இயக்குநர் போன்ற பதவிகளில் இதுவரை

எத்தனை ஆதி திராவிடர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதுவரையில் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த மூன்று அலுவலர்களுக்கு மருத்துவப்பணி மற்றும் குடும்பநல இயக்குநராகவும் மூன்று அலுவலர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநராகவும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத்துறையில் ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

(ஆ) ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த டாக்டர் எம். லிங்கைய்யா 25—10—1976 முதல் 12—9—1977 வரையிலும், டாக்டர் ஆர். சரஸ்வதி என்பவர் 5—2—1982 முதல் 31—10—1983 வரையிலும், டாக்டர் எம். ஜி. முத்துகுமாரஸ்வாமி என்பவர் 27—2—1988 முதல் 27—7—1989 வரையிலும் மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநராகப் பதவி வகித்துள்ளார்கள்.

டாக்டர் அண்ணாமலை 16—8—1983 முதல் 30—6—1984 வரையிலும், டாக்டர் இ. எம். சரஸ்வதி 17—12—1986 முதல் 31—3—1987 வரையிலும் டாக்டர் டி. ஜே. திலக் 5—8—1987 முதல் 31—8—1988 வரையிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநராகப் பதவி வகித்துள்ளனர்.

(10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

கழிவுநீர் துப்புரவு.

* 3483. திருமதி எஸ். பி. சற்குணம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் மணலி சாலையில் கழிவுநீர் தேங்கியுள்ளதை துப்புரவு செய்து தூய்மைப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?